The Scarborough Hospital

# செய்தி வெளியீடு

## இந்நேரத்தில் ஒன்றிணைவதை ஸ்காபரோ மருத்துவமனை சபை நிராகரிக்கின்றது

**மார்ச் 15, 2014** - ஸ்காபரோ மருத்துவமனை (TSH) இயக்குநர் சபை, றூஷ்வலி சுகாதாரத் திட்ட அமைப்புடன் (RVHS) முன்மொழியப்பட்ட ஒரு இணைப்பில், இந்நேரத்தில் தொடர்வதில்லை என்று முடிவுசெய்துள்ளது. பின்வரும் TSH சபையின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

*ஸ்காபரோ மருத்துவமனையின் ("TSH") இயக்குநர் சபை ("இயக்குநர்"), மருத்துவமனை றூஷ்வலி சுகாதாரத் திட்ட அமைப்புடன் ("RVHS") ஒன்றிணைவதை மார்ச் 4, 2014 அன்று, ஏனைய விதிமுறைகளின் மத்தியில் பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க, அங்கீகாரமளித்த* ***அதே சமயம்:***

*i. சபையின் நிரல்படுத்தப்பட்ட கலந்துரையாடலுக்கமைய (ஸ்காபரோ சமூகத்துக்கு ஒன்றும் மேற்கு றூறாம் சமூகத்துக்கு ஒன்றுமாக) வளாகப் புதுப்பித்தலுக்கான நிறைவாக்கம், திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலதனத் திட்டமிடல் நிதியுதவிக்கான ஒன்ராறியோ அரசாங்கத்தின் அங்கீகாரம்; மற்றும்*

*ii. தவிர்க்கமுடியாத ஒரு தடவையான செலவுகளுக்கும், ஒன்றிணைப்புச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட தொடர்ச்சியான இயக்கச் செலவுகளுக்கும் ஈடுகொடுப்பதற்கு, மையக் கிழக்கு LHIN மற்றும்/அல்லது சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சினது ("MOHLTC") நிதியுதவி.*

***அத்துடன் அதேசமயம்*** *இத்தீர்மானம் எடுக்கப்பட்ட நேரம், முன்மொழியப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட மருத்துவமனையின் நீண்டகால வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் போதுமானளவு பூர்த்திசெய்யப்படவில்லை.*

***அத்துடன் அதேசமயம்*** *TSH ஆல் MOHLTC க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு, தொடரும் கட்டத்திலிருக்கும் அறுவைச்சிகிச்சைப் பிரிவு மீளபிவிருத்தி மற்றும் நோய் கண்டறியும் கதிர்ப்படக் கூடம் (Diagnostic imaging concourse) ஆகியவற்றுக்கான TSH பொது வளாக மூலதனச் செயற்திட்டங்கள் ("மூலதனச் செயற்திட்டங்கள்") ஒன்றிணைவதன் தீர்மானத்தின் முடிவைப்பொறுத்து MOHLTC இனால் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.*

***அத்துடன் அதேசமயம்*** *மையக் கிழக்கு LHIN ஊடாகக் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் மருத்துவ சேவைகளுக்கான பிராந்தியத் திட்டமிடல்*

*நடவடிக்கைகளிலும், ஏனைய தொடர்புடைய முயற்சிகளிலும் TSH தொடர்ந்தும் பங்குபற்றும்.*

***அது தீர்க்கப்படுவது :***

1. *TSH ம் RVHS ம் ஒன்றிணைதல் உடனடியாகக் கைவிடப்படும், அத்துடன் மேலே முற்பகுதியில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்போது அது மறுபரிசீலனை செய்யப்படும்.*

2. *ஒன்ராறியோ மாகாணத்தின் ஒரு தடவையான மேலதிக $3 மில்லியன் நிதியுதவியை ஏற்றுக்கொள்வதுடன், MOHLTC இன் மூலதன முதலாம் கட்டச் செயற்திட்ட அங்கீகாரத்திற்கு இட்டுச்செல்லும் மருத்துவ வளாகங்களினது உள்கட்டமைப்புக் குறைபாடுகள் மற்றும் நவீனமயப்படுத்துவதற்கான மூலதனத் திட்டமிடல் செயற்பாட்டில் RVHS உடன் இணைந்து பங்குபற்றும்.*

3. *மூலதனச் செயற்திட்டங்களுக்கான அடுத்த மூலதனத் திட்டமிடல் நிலைக்கான அங்கீகாரத்தை மீளமர்த்துவதுடன், அதைத் துரிதப்படுத்துமாறு TSH, MOHLTC இடம் முறையே வேண்டுகோள் விடுக்கின்றது.*

4. *TSH கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு முன்பு அட்டவணைப்படுத்தப்பட்ட மார்ச் 18, 2014 இல் நடைபெறும் விசேட உறுப்பினர் கூட்டத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்.*

5. *TSH சபை தனது நிர்வாகம், ஊழியர்கள், மருத்துவ நிபுணர்கள், சமூக உறுப்பினர்கள், அத்துடன் RVHS ல் உள்ள எமது சக பணியாளர்களுக்கும், ஒன்றிணைப்புச் செயலில் அவர்களது பணி, ஆதரவு மற்றும் பங்களிப்புகளை ஏற்றுக்கொள்வதுடன் நன்றியையும் தெரிவிக்கின்றது.*

மையக் கிழக்கு உள்ளகச் சுகாதார ஒருங்கிணைப்பு வலையாக்கத்தின் (Central East LHIN) அறிவுறுத்தலின் பிரகாரம், ஒரு உதவியளிக்கப்பட்ட ஒன்றிணைப்புச் செயற்திட்டத்தினூடாக வளங்களை மேலும் திறன்படப் பயன்படுத்தும் அதேநேரத்தில், எமது சமூகத்திலுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக உன்னத பராமரிப்பை வழங்கும் ஓர் இணைக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்புச் சேவைத் திட்டத்தை உருவாக்கும்பொருட்டு, கடந்த ஒரு வருட காலமாக மருத்துவமனைகள் தமது பங்குதாரர்களுடன் நெருங்கி இணைந்து செயற்பட்டன.

“இச்செயற்திட்டத்தின் முக்கிய பகுதி எமது நோயாளர்கள், சமூகம் மற்றும் பங்காளர்கள் குழுக்களுக்குச் செவிமடுத்தல் ஆகும்” என்று கூறிய TSH சபைத் தலைவர் ஸ்டீபன் ஸ்மித் (Stephen Smith), “நோயாளர்களுக்கு முதலிடம் கொடுப்பதில் கவனம் செலுத்தும் எமது பணிக்கு வழிகாட்டிய பரந்த பின்னூட்டங்களும் கருத்துக்களும் எங்களுக்குக் கிடைக்கப்பெற்றன.” என்றும் கூறினார்.

“எமது பல பங்குதாரர்களிடமிருந்து மருத்துவமனைகளுக்கு மகத்தான ஆதரவு கிடைத்தது” என்று கூறிய TSH சபைத் தலைவரும் பிரதான நிர்வாக உத்தியோகத்தருமான ராபர்ட் பைரோன் (Robert Biron), “முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பின் பெறுமானத்தின் பரிமாணம் மிகவும் திடமானது – அது நோயாளர்களின் பராமரிப்பை மேம்படுத்துவது பற்றியதும், எதிர்காலச் சந்ததியினருக்காக எமது உள்ளூர் மருத்துவப் பராமரிப்பை நிலைத்திருக்கச் செய்வது பற்றியதுமாகும்.” என்றும் கூறினார்.

ஒரு விரிவான விருப்பு ஒருங்கிணைப்புச் செயற்திட்டம், சட்டம் மற்றும் நிதி நிலை பற்றிய தளராத ஊக்கம், அத்துடன் தீவிர பங்குதாரர் ஈடுபாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பூர்த்திசெய்த பின்னர் எதிர்காலத்தில் தொடர்ந்தும் தரமான நோயாளர் பராமரிப்பை வழங்குவதற்குச் சிறந்த வழி ஒருங்கிணைப்புத்தான் என்ற ஒரு முடிவுக்கு மருத்துவமனைகள் வந்தன.

மாகாணத்தின் மாற்றுத்திட்ட அட்டவணைக்கேற்ப, அவர்களது சுகாதாரப் பராமரிப்புக்கான செயற்திட்டத்தில் விபரிக்கப்பட்டிருப்பதைப் போன்று உத்தேசிக்கப்பட்ட ஒன்றிணைப்பு சமநிலைப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அது சேவையாற்றும் சமூகங்களுக்குக் கொடுக்கும் பராமரிப்பை முடிவில் மேம்படுத்தும். ஒன்றிணைப்பின் பலன்களையும், முழுத் திறனையும் உணர்வதற்கு இரு மருத்துவமனைகளும், தமது வளாகங்களை வேறுபட்ட போட்டியிடும்

அமைப்புகளாகக் கருதாது, ஒரு சேவைத் திட்டமாக ஒழுங்கமைக்க வேண்டியது அவசியமாகும். இதன் ஒரு பகுதியாக, ஒரு பொறுப்புக் கூறவேண்டிய ஒரு கட்டமைப்பாக (உதா - ஒரு மருத்துவ சபை, ஒரு நிர்வாக அணி) இருப்பது ஒரு முக்கிய தேவையாகும்.

எனினும், ஒன்றிணைப்புக்கள் காலத்தையும் நிதியையும் உள்வாங்கும். ஒன்றிணைக்கப்பட்ட மருத்துவமனை நீண்டகால வெற்றிக்காக அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, வெளிப்படையான முதலீகள் தேவைப்படுகின்றன. TSH மற்றும் RVHS ஒன்றிணைப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான முதலீடுகளைத் தாமாகவே செய்வதற்கு அவர்களிடம் நிதித்திறன் இல்லை.

ஆகவே, மருத்துவமனை வளாகங்களிலிருக்கும் முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான மூலதனத் திட்டமிடல் நிதியுதவிகளுக்கும், நிலைமாற்றம் மற்றும் ஒன்றிணைப்புடன் தொடர்புடைய மீளமீள ஏற்படும் செலவுகளுக்கான இயக்க நிதிகளுக்கும் ஆதரவளிக்குமாறு, மாகாண அரசிடம் மருத்துவமனைகள் கோரிக்கை விடுத்தன. துரதிஷ்டவசமாக, உத்தேசிக்கப்பட்ட ஒன்றிணைப்பை ஒரு நிஜமாக்குவதற்குத் தேவைப்படும் முதலீடுகளின் நிலையை TSH மற்றும் RVHS இனால் அடைய முடியவில்லை.

எதிர்காலத்தில் சூழ்நிலைகள் மாறினால், TSH அந்த வாய்ப்பை மறுபரிசீலனை செய்யும். TSH ஸ்காபரோ சமூகத்திற்குக் கிடைக்கும் சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக, மையக் கிழக்கு LHIN, RVHS, மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுடன் இணைந்து, தொடர்ந்தும் சேவையாற்றும்.

“RVHS இல் எமது பங்காளர்கள், எமது சமூகம், எமது சபை உறுப்பினர்கள், மருத்துவ நிபுணர்கள், பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பங்காளர்கள் அனைவருக்கும் எம்முடன் இக்கோட்பாட்டுக்காகப் பணிபுரிந்தமைக்கு நன்றி கூறுகின்றோம்” என்று கூறிய ஸ்மித் (Smith), “உங்கள் பங்களிப்பையும் ஆதரவையும் மிகவும் பாராட்டுகின்றோம்.” என்றும் கூறினார்.

-30-

கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/ பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது. TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது. ரோறன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்திய சாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து www.leadingforpatients.ca என்னும் மின்னம்பலத்தைக் காண்க:

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital
(416) 438-2911, ext. 8308
hocampbell@tsh.to